சட்டமன்றத்தையும் சேர்த்து, வெளியிட வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம். ஆனால், அப்படி வெளியிடுவதற்கு இவர்கள் நம்மிடத்திலேயிருந்து எதிர்பார்க்கிற தொகை இருக்கிறதே, இதற்கு இன்னொரு சட்டமன்றமே கட்டிவிடலாம். அந்த அளவுக்கு எதிர்பார்க்கிறார்கள். ஆகையினாலேதான் நாம் அதை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறோம். மத்திய அரசாங்கம் தாங்கும், அதனாலே அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய மிக முக்கியமான நிகழ்ச்சிகள், Submission of Budget வேறு இந்தமாதிரி மிக முக்கியமான பணிகளையாவது, தனியார் டி.வி. மூலம் நாம் வெளியிடுவதற்கு பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குப் போதிய பணம் நிதியமைச்சரிடமிருந்து வாங்கிக் கொடுப்பீர்களானால், அதையெல்லாம் சிந்திக்கலாம்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் உச்சநீதிமன்ற ஆணை காரணமாக மூடப்பட இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் பல அண்மையில் சுப்ரீம் கோர்ட் உத்தரவு ஒன்றின் காரணமாக மூடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்கிற பிரச்சினை பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று, திரு. முகமது ஆசிப், திரு. தாமரைக்கனி, திரு. தருமலிங்கம், ஆகியோர் என்னிடத்தில் ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன். திரு. முகமது ஆசிப்.

[1995 மே 5

முற்பகல் 10-30

***Thiru Mohamed Asif :** Honourable Speaker, Sir, at the outset, I thank you for giving me this privilege of raising this Special Mention in this august House. Recently, the Supreme Court, while disposing a 'Vellore Citizens Welfare Forum's' petition—public interest petition have ordered for the closure of 57 tanneries in Ambedkar District in Tamil Nadu and also given time for only about three months for another 496 tanneries to fulfil the requirement of provision of effluent treatment plant. On this point, I would like to submit before the House, the difficult situation the tannery owners are facing.

First of all, the Government of India and the State Government were giving subsidy to these tanneries for the Common effluent plants-provision of common effluent plants, which has been now reduced to 25 percent recently. With the result, the Developers of common effluent plants also has adopted a very slow process for want of resources. Secondly, these tanneries are spread out all over the North Arcot District and they are not situated in one group wherein it is feasible to provide the common effluent plants. Of course, few industries which are very close and in a group, wherever possible, the common effluent plant programme is initiated and for which TALCO, the State agency is implementing and they have implemented in certain areas fully and in certain towns the work is still on.

But, now the main point is--the individual tanneries, the isolated ones which are spread out in a vast area of the whole North Arcot, they are left in a very difficult situation, because they are not being provided with subsidy either by the Central Government or by the State Government. Now, the Supreme Court has given only three months time for another 496 industries to comply with the orders and it is rather very difficult for them to do so, failing which naturally the industries will be closed. For this, what they need is the immediate help from the State Government for providing them enough financial resources, since they have already failed in their approach in getting institutional loans and from I.D.B.I. etc.. What these industries, the individual tanners want is an aid from the State Government either in the form of grant or subsidy or loan or

whatever it is to meet this immediate need so that they could also fulfil the provision of individual effluent treatment plant.

In this regard, as we all know, these leather industries are the highest foreign exchange earners of our Nation and for which a major portion of contribution is only from Tamil Nadu, for which we are almost very proud. Besides this, the employees of these industries are mostly the brothers and sisters of Adi-dravida community. In the event of closure of these industries, not only so many thousands of our Adi-dravida brothers will be put to hardship for want of livelihood , but also it will reflect adversely on our foreign exchange earning.

Under these circumstances, I humbly draw the attention, through you, Sir, of our great leader and Chief Minister of Tamil Nadu who is very kind and generous-hearted to kindly take this matter into her kind consideration and see that an immediate relief is granted so that they could escape from the clutches of the orders of the Court, for closing the industry.

At the same time, our Hon'ble Industries Minister who has done wonderfully well and projected our industries in the State to a marvellous level, I am sure, will definitely place all these facts before our leader and see that immediate relief is given to the deserving people and thus save this lucrative industry which is almost run by the minority Muslim community. With these words, I thank you Sir once again for giving me this opportunity.

முற்பகல் *10–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம், சுருக்கமாகச் சொல்லுங்கள், அவர் நிறையச் சொல்லிவிட்டார்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகள் மாசு அதிகமாக உற்பத்தி செய்கின்றன என்று அவற்றை மூடிவிடும்படி உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. மாசு அதிகமாக பரவுகிறது என்று தெரிந்தும் அவர்கள் அதைக் கட்டுப்படுத்தாமல் நீண்ட நெடிய நாட்களாக கழிவு நீரை வெளியே விட்டதால் கிட்டத்தட்ட 2½ லட்சம் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டன. தற்சமயம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குத் தங்கள் மூலமாக நான் கொண்டு வருவது, இந்த நிலை இருந்தும் அவர்கள் அந்தக் கழிவு நீரை சுத்திகரிக்காமல்

தொடர்ந்து அரசு ஆணையை ஏற்காமல் விட்டதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்தில் அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைத்து இருந்தும் குடிநீர் பாதிக்கப்பட்டு விட்டது, விளைநிலங்கள் பாதிக்கப்பட்டு விட்டது, என்ற நிலை இருந்தும் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் விட்டதன் காரணமாக இவ்வளவு தூரம் நிலைமை தலைக்கு மீறிப் போய்விட்டது. இந்த நேரத்தில் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது, பல்லாயிரம் ஏழைத் தொழிலாளர்கள், குறிப்பாக ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் அந்தத் தொழிற்சாலைகளில் பணி செய்கின்றார்கள். இந்த ஆலைகளை மூடிவிடும் ஆணைக்குட்பட்டு அவர்கள் வேலையிழந்து அவர்களுடைய குடும்பம் வறுமையிலே வாடி உணவுக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே தங்கள் மூலமாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து உடனடியாக அந்த ஆலைகள் முதலாளிகளிடமிருந்து, அவர்களுக்கு கிடைத்த மாத ஊதியத்தில் இருந்து பாதி ஊதியமாவது அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்து அவர்களுடைய வறுமையைப் போக்க வேண்டும். தற்பொழுது அந்த நிலையைப் போக்கி அந்தக் கழிவினால் நிலங்கள் மாசுபடுவதை உடனடியாக தடுக்கவேண்டுமென்று உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குத் தெரியாமல் போகக் கூடாது. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் இல்லை, அங்கு ஒன்றுகூட இருக்காது. நீங்கள் கொடுத்திருக்கிற காரணத்தால் உங்கள் பெயரைச் சேர்த்திருக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: இந்தத் தொழிற்சாலைகள் விதிமுறைகளுக்கு மாறாக செயல்படுகின்றன என்று சொல்லி சுப்ரீம் கோர்ட் 563 தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு குடிநீர் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லி, சுப்ரீம் கோர்ட் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டு அமைக்க வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறார்கள். இதற்கு முன்பு தமிழக அரசு மாசுக்

கட்டுப்பாட்டு வாரியம் இந்தத் தொழிற்சாலைகளுக்குப் பலமுறை நோட்டீஸ் விட்டிருக்கிறது. நோட்டீஸ் விட்டிருந்தும் யாருக்குமே கட்டுப்படாமல் அந்தத் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருந்தன. தமிழக அரசு அந்தத் தொழிற்சாலைகளை மூடிவிட்டால் சில அரசியல் கட்சிகள், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று போராட்டம் நடத்துவார்கள். ஆகவே இக்கட்டான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் இப்போது சுப்ரீம் கோர்ட் தொழிற்சாலைகளை மூடிவிடவேண்டும், விதிமுறைகளுக்கு உட்பட்டு அந்தத் தொழிற்சாலைகள் இயங்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளது. நீதிக்குத் தலைவணங்கு என்ற அடிப்படையில் இந்த அரசு உடனே அந்தத் தொழிற்சாலைகளை மூடிவிட்டது.

முற்பகல் 10-40

ஆனால் இந்தத் தொழிற்சாலைகளினால் அன்னியச்செலாவணி இந்தியாவிற்கு அதிகமாகக் கிடைக்கிறது. அதையும் பார்க்க வேண்டும். அன்னியச் செலாவணி அதிகமாக கிடைப்பதாலே அந்தத் தொழிற்சாலைகளுக்கு லாபம் அதிகமாகக் கிடைக்கிறது. லாபம்தான் அதிகமாகக் கிடைக்கிறதே, ஏன் அந்த சுத்திகரிப்பு நிலையங்களை வைப்பதற்கு அவர்கள் யோசிக்கிறார்கள்? ஆதலால் இனிமேலாவது, அரசு மிகவும் கவனமாக இருந்து, அரசின் அனுமதி (Licence) இல்லாமல் எந்தத் தொழிற்சாலையாவது இயங்கிக் கொண்டிருந்தால் அதை ரத்து செய்ய வேண்டும். முறைகேடாக நடந்தவர்கள் இன்னும் அரசையும் கோர்ட்டையும் ஏமாற்றாத அளவில் நல்லமுறையில் நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்றுதான் சுப்ரீம் கோர்ட்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. திரு. முஹமது ஆசிப் அவர்கள், அந்தத் தொழிற்சாலைகள் பாவம், காப்பாற்றுங்கள் என்று கேட்கிறார், நீங்கள் மூடிவிடுங்கள் என்று சொல்லுவீர்கள் போல் இருக்கிறது. போதும், உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் (குறுக்கீடு) உங்களுக்குச் சொல்லுவார்,

திரு. இரா. தாமரைக்கனி: தமிழக அரசு நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள், பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள், அரசு துரிதமாக இன்னும் நல்லமுறையில் நடவடிக்கை எடுத்து, பொதுமக்களுக்கும் நன்மை ஏற்படவேண்டும், தொழிலாளர்களுக்கும் நன்மை ஏற்பட வேண்டும் என்று சொல்லுகிறேனே தவிர.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொல்லி விட்டீர்களே, உட்காருங்கள். போதும், சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கிற தோல் தொழிற்சாலைகள் எல்லாம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்னாலேயே ஆரம்பிக்கப்பட்டவை. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 27-2-1982-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தோல் தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாடு வாரிய இசைவு ஆணை பெற விண்ணப்பிக்க கடைசி நாள் 31-5-1984 என்று மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவிப்பு செய்திருந்தது. மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவித்த காலவரையறைக்குள் இசைவு ஆணைக்கு விண்ணப்பிக்காத தொழிற்சாலைகள் 42, இவை மீது மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஏற்கெனவே வழக்கு தொடர்ந்து இருக்கிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த காலவரையறை 31-7-1985. 31-7-1985 காலவரையறைக்குப்பின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காமல் இயங்கி வந்து குற்ற வழக்கு தொடுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 105. சொந்தமாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த காலவரையறை கடைசியாக நீட்டிக்கப்பட்டது 15-10-1994, பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த காலவரையறை கடைசியாக நீட்டிக்கப்பட்டது. 31-3-1995. சொந்தமாக தனிக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தமிழ்நாடு முழுவதும் 91, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 51. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ள தோல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தமிழ்நாடு முழுவதும் மொத்தமாக 708, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மட்டும் 445, பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேராமலும் மற்றும் தனிக் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையங்கள் அமைக்காத தோல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தமிழ்நாடு முழுவதும் 81, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மட்டும் 57. நீர் சட்டத்தின் 33-ஏ பிரிவின்படி மூடும்படி மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆணையிடப்பட்ட தோல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தமிழ்நாடு முழுவதும் 62, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 24. சென்னை

1995 மே 5] [திரு. ம. சின்னசாமி]

உயர்நீதிமன்றத்தில் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய உத்தரவை எதிர்த்து இடைக்கால தடை உத்தரவு பெற்று இயங்கிவரும் தோல் தொழிற்சாலைகள் தமிழ்நாடு முழுவதும் 62, வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 24. வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் இயங்கிவரும் தோல் தொழிற்சாலைகளில், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சேராமல் மற்றும் தனித்தனியே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்காத 57 தோல் தொழிற்சாலைகளை மூடும்படி வேலூர் மக்கள் நல மன்றம் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் 1–5–1995 அன்று ஆணை பிறப்பித்துள்ளது. இதில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வாரியத்தின் ஆணைக்கு எதிராக ஏற்கெனவே இடைக்கால தடை உத்தரவு பெற்று இயங்கிவரும் 12 தோல் தொழிற்சாலைகளும் இதில் உள்ளடங்கும்.

முற்பகல் 10–45

மேற்கண்ட உச்சநீதிமன்ற ஆணைகளை உடனடியாக செயல்படுத்துமாறு வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அந்த மாவட்டத்தினுடைய காவல்துறை கண்காணிப்பாளருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டு சேர்ந்து பொதுவாகவோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துவரும் 496 தோல் தொழிற்சாலைகள் அந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை முழுவதுமாக செயல்பாட்டுக்கு கொண்டுவர மூன்று மாத கால அவகாசத்தையும் உச்சநீதிமன்றம் அளித்துள்ளது. தற்போது வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய பொதுச் சுத்திகரிப்பு நிலையங்கள் முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள சுத்திகரிப்பு நிலையங்களையும் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள காலவரையறைக்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்படும்.

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள தோல் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரினால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் தர்மலிங்கம் சொன்னார்கள். அந்த பாதிப்பை கட்டுப்படுத்த வேளாண்மைத் துறை ஆய்வு செய்து ஒரு ஆய்வறிக்கையை அரசுக்கு தற்போது கொடுத்துள்ளது. இந்த அறிக்கையின் மீது மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கருத்துக்கள் பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. இந்த அறிக்கையில் இந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர் பாதிப்பை தடுக்கும் பொருட்டும், நிலத்தை செழிப்பான நிலைக்கு கொண்டுவரும் பொருட்டும், அம்மாவட்டத்தில்

வருங்காலத்தில் புதிய தோல் தொழிற்சாலைகளை அனுமதிக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் முகமது ஆசிப் அவர்கள் பேசுகின்ற போது இந்தத் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீரை சுத்தப்படுத்துவதற்காக அமைக்கப்படும் Common Effluent Treatment Plant பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மத்திய அரசும், மாநில அரசும் கொடுத்து வந்த சப்ஸிடி, மான்யத் தொகையை குறைத்து விட்டதாக சொன்னார்கள். அந்த மான்ய தொகை 25 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று உத்தரவிட்டது மத்திய அரசுதான். மத்திய அரசின் உத்தரவிற்கிணங்க மாநில அரசு அந்த நிலையை எடுக்க வேண்டி இருந்தது.

அடுத்து, இப்போது உச்சநீதிமன்றம் 3 மாத கால அவகாசம் கொடுத்திருக்கிறது. அந்த அவகாச காலத்திற்குள் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்துகிறோம் என்று உச்சநீதிமன்றத்தில் முறையிட வேண்டும். அரசு இதில் ஒன்றும் செய்வதற்கு இல்லை. தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை விதிகளுக்குட்பட்டு அரசு கொடுக்கிற மான்யத்தை அவ்வப்போது அரசு கொடுத்து வருகிறது.

அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற இந்தத் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற ஒரு காரணத்திற்காக பொது மக்களுடைய நலன்கள் பாதிக்கப்படக்கூடாது. தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தைப் பொறுத்தவரை, பல்வேறு நிலைகளில், இரண்டு மூன்று கட்டங்களில் அவர்களுக்கு சலுகைகளைக் கொடுத்து கால நீட்டிப்பு கொடுத்து பார்த்தது. ஆனால் அவர்கள் அந்தக் கால நீட்டிப்பை சரியாக எடுத்துக் கொள்ளாமல் இருந்த காரணத்தால் வேலூர் மக்கள் நலமன்றம் என்ற அமைப்பு 1991–ஆம் ஆண்டு இந்த வழக்கினை உச்சநீதிமன்றத்திலே தொடுத்து, இந்த 4 ஆண்டு காலத்திற்கு பின்னால்தான் இந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டிய ஒரு கட்டாய நிலை உச்சநீதிமன்றத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசுகின்றபோது தொழிற்சாலைகள் இருக்க வேண்டும், அதே நேரத்தில் தொழிலாளியும் பாதிக்கப்படக்கூடாது என்று சொன்னார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே பாடி இருக்கிறார்கள். ஆளும் வளரணும், அறிவும் வளரணும் என்று. அதைப்போல தொழிலும் வளர வேண்டும், அதேநேரத்தில் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படக்கூடாது என்பதுதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கொள்கை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தத் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரின் காரணமாக வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தை மத்திய அரசாங்கம் ஒரு பிளாக் டிஸ்டிரிக்ட்டாக ஒரு கறுப்பு மாவட்டமாக -- அங்கே இனி எந்தத் தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கக்கூடாது என்ற ஒரு முடிவெடுத்து அதனை அறிவித்து இருக்கிறது. ஆகவே இந்த நேரத்தில் தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கு சட்டப்படி கொடுக்கின்ற மானியத்தை நாங்கள் விரைவாக ரிலீஸ் செய்வதற்கு தயாராக இருக்கிறோம். பாதிக்கப்பட்டவர்கள் உச்சநீதிமன்றத்திற்கு சென்று நாங்கள் ஒரு குறுப்பிட்ட காலத்திற்குள் இந்தக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்திவிடுகிறோம் என்று நீதிமன்றத்திலே முறையிட வேண்டுமே தவிர அரசைப் பொறுத்தவரையில் இந்தக் காலகட்டத்தில் ஒன்றும் செய்வதற்கு இல்லை.

முற்பகல் *10-50*

அதிலே பணியாற்றுகின்ற ஆதிதிராவிட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மனிதாபிமான அடிப்படையிலே அவர்களுக்கு அரசு ஏதாவது செய்யவேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் அந்தத் தோல் தொழிற்சாலை அதிபர்களை அழைத்துப் பேசி, இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படுகின்ற வரைக்கும், அவர்களுக்கு பாதி ஊதியமாவது கொடுக்க முடியுமா என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்வதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக அரசைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தைப் பொறுத்தவரையிலும், இரண்டு, மூன்று முறை காலநீட்டிப்புக் கொடுத்துவிட்டது. மாசுக் கட்டுப்பாடு வாரியமும், அரசும் இப்போது இதில் செய்வதற்கு எதுவும் இல்லை. தனிப்பட்ட

தொழிற்சாலைகள் பரவி இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் ஒன்று சேர்ந்து Common Effluent Treatment-இல் சேரமுடியாது என்று உறுப்பினர் திரு. முகமது ஆசிப் அவர்கள் சொன்னார்கள். வேறு வழியே இல்லை என்று சொன்னால், வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற பகுதிகளில் தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் காரணமாக நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், பாலாறும் கெட்டுவிட்டது. ஆகவே, அந்த மக்களுடைய உடல் நலத்தைக் கருதி, நடவடிக்கை எடுக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. அரசு இதில் ஒன்றும் செய்வதற்கு இல்லை. உச்சநீதிமன்றத்தில் முறையிட்டு நாங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் Common Effluent Treatment plant அல்லது தனிப்பட்ட முறையிலே சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்துக் கொள்வோம் என்று உச்சநீதிமன்றத்தில் முறையிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) திருச்சி அண்ணல் காந்தியார் பொதுமருத்துவமனையில் அல்ட்ராசானிக் ஸ்கேனர் இயங்காதது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் ச. ஆரோக்கியசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தியார் பொது மருத்துவமனையில் உள்ள அல்ட்ராசானிக் ஸ்கேன் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயங்காத நிலை குறித்து" மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.